தினமணி

**கொப்பரைத் தேங்காய் கொள்முதலை முறைப்படுத்த வேண்டும்**

First Published : 27 Mar 2010 05:50:11 AM IST

நாகப்பட்டினம், மார்ச் 26: கொப்பரைத் தேங்காய் கொள்முதல் பணியை முறைப்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ஆ. அண்ணாதுரை தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஆர்.வி. கருணாகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) விஸ்வநாதன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

இயற்கை வேளாண் ஆர்வலர் அ. அம்பலவாணன்: இயற்கை வேளாண்மை ஊக்கப்படுத்தப்படும் என்று தமிழக நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் குறுவை சாகுபடியை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆறுபாதி வி. குருசாமி: விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருமருகல் ராமகிருஷ்ணன்: இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்தும் வகையில் ரசாயன பூச்சி மருந்துகளின் விற்பனையைக் குறைக்க வேண்டும். அறிவிக்கப்படாத தொடர் மின் வெட்டுகள் குறித்து மின் வாரியம் விளக்கம் அளிக்க வேண்டும்.

கொள்ளிடம் கோதண்டராமன்: கொள்ளிடம் ராஜன்வாய்க்கால் மற்றும் புதுமன்னியாறு பாசனப் பகுதிகளில் நடைபெற்றுள்ள கோடை நெல் சாகுபடிக்கு, கொள்ளிடம் வடிகால்களைத் தேக்கி, பாசனத்துக்கு வழிவகை செய்ய வேண்டும்.

வேதாரண்யம் முஜிபு ஷரீக்: நாகப்பட்டினம் மாவட்டம், தேத்தாக்குடியில் இயங்கும் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையத்தை வெள்ளப்பள்ளம் புதன் சந்தைக்கு மாற்றி, கொள்முதல் பணிகளை முறைப்படுத்த வேண்டும். வெள்ளத் தடுப்புத் திட்டத்தில் டெல்டா மாவட்டங்களில் தடுப்பணைகள் கட்டவும், மதகுகள் கட்டவும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

வேதாரண்யம் சோமு. இளங்கோ: தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் நீர் நிலை ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும். நாகூர்- காரப்பிடாகை அரசுப் பேருந்தை சடையன் கோட்டகம் வழியே, தலைஞாயிறு வரை நீட்டிக்க வேண்டும். நீர்நிலைகளில் மண்டியுள்ள ஆகாயத் தாமரை செடிகளை அகற்ற வேண்டும்.

மயிலாடுதுறை ஆ. அலெக்ஸ்ண்டர்: மயிலாடுதுறை, சுற்றுப் பகுதிகளில் அறிவிக்கப்படாத மின் வெட்டுகளால் பொதுமக்கள் பல்வேறு பிரச்னைகளுக்குள்ளாகின்றனர். 10 மணி நேர மின் விநியோகம் இல்லை. மயிலாடுதுறை உழவர் சந்தையை இடம் மாற்ற வேண்டும். மின் விநியோகத்தை சீரமைக்க வேண்டும்.

அதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ஆ. அண்ணாதுரை பேசியது:

தற்போது பொதுத் தேர்வுகள் நடைபெற்று வருவதால் அறிவிக்கப்படாத மின் வெட்டுகளைத் தவிர்க்க மின் வாரிய அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களால் மின் விநியோகம் நிறுத்தப்பட வேண்டியிருந்தால், அது குறித்து முன்கூட்டியே தகவல் அளிக்க வேண்டும்.

விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைத் தடுக்க அரசு கொள்கை வகுத்து வருகிறது. அது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

நிகழாண்டில் இதுவரை 1,24,833 ஹெக்டேரில் சம்பா மற்றும் தாளடி அறுவடைப் பணிகள் நிறைவடைந்துள்ளன. பயிர் மதிப்பீட்டாய்வு பரிசோதனை மூலம், மாவட்டத்தில் அதிகபட்சமாக ஹெக்டேருக்கு 9,640 கிலோவும், குறைந்தபட்சமாக 780 கிலோவும், சராசரியாக 4,429 கிலோவும் மகசூல் கிடைப்பது தெரிய வந்துள்ளது.

இதுவரை 2.16 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது 196 கொள்முதல் நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன என்றார் அண்ணாதுரை.

**ஈரோட்டில் தேங்காய் பருப்பு கொள்முதல் மையம்**

First Published : 27 Mar 2010 03:57:14 AM IST

ஈரோடு, மார்ச் 26: ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறையில் தேங்காய் பருப்பு கொள்முதல் மையம் அமைக்கப்படும் என்று ஆட்சியர் ஆர்.சுடலைக்கண்ணன் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், ஆட்சியர் ஆர்.சுடலைக்கண்ணன் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட மன்றத்தி0்ல் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளின் கோரிக்கை விவரம்: பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதை நிறுத்திவி0்ட்டு காலிங்கராயன் வாய்க்கால் சீரமைப்பு பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும். கடைமடை பகுதிகளில் உள்ள பயிர்களை பாதுகாப்பதற்கு, கீழ்பவானி வாய்க்காலில் இம்மாதம் இறுதிவரை தண்ணீர் திறக்க வேண்டும். தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில்தான் தென்னை மரங்கள் அதிகம் உள்ளன. தாராபுரத்தில் அரசு சார்பில் தேங்காய் பருப்பு கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது. தாராபுரம் பகுதி திருப்பூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டதால், ஈரோடு மாவட்ட விவசாயிகள் தேங்காய் பருப்பினை கட்டுப்படியாகும் விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் அவதியடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் அரசு சார்பில் தேங்காய் பருப்பு கொள்முதல் மையத்தை உடனடியாக தொடங்க வேண்டும்.

அறிவிக்கப்பட்ட நேரத்தில் கூட மும்முனை மின்சாரம் சீராக வழங்கப்படாததால், விவசாய பணிகள் பாதிப்படைந்துள்ளது. கோடை காலம் தொடங்கிவிட்டதால், பசுந்தீவனங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆவின் நிறுவனம் மூலம் வழங்கப்படும் கால்நடை தீவனங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து ஆட்சியர் பேசியது:ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையில் அரசு சார்பில் தேங்காய் பருப்பு கொள்முதல் மையம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. மின் விநியோகம் குறித்த பிரச்னைகள் குறித்து விவசாய சங்க பிரநிதிகள் மற்றும் மின்வாரிய அதிகாரிகளுடன் ஆட்சியர் முன்னிலையில் வெள்ளிக்கிழமை தோறும் ஆட்சியர் அலுவலகத்தி0்ல் கூட்டம் நடத்தப்பட்டு, விவசாய மின் இணைப்புகளுக்கு சீரான மினசாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வேளாண்மை பொறியில் துறையின் மானிய உதவியில் கதிர் அறுவடை இயந்திரம், டிராகடர், பவர் டில்லர் உள்ளிட்ட விவசாய கருவிகளை ஆட்சியர், விவசாயிகளுக்கு வழங்கினார் (படம்).

வேளாண்மை இணை இயக்குநர் கோபால், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சிவமுத்துக்குமாரசாமி, உயரதிகாரிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**சொட்டு நீர்ப்பாசனத்துக்கு 100 சத மானியம் வழங்கக் கோரிக்கை**

First Published : 27 Mar 2010 02:26:33 AM IST

ஈரோடு, மார்ச் 26: சொட்டு நீர்ப்பாசனத்துக்கு 100 சத மானியம் வழங்கி வறட்சியினால் விவசாயம் பாதிக்கப்படாமல் தடுக்க வேண்டும் என்று காலிங்கராயன் பாசன சபை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சபை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், பாசன சபை தலைவர் விஎம்.வேலாயுதம் தலைமையில், ஈரோடு மாவட்டம் கொம்பனைப்புதூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்: காலிங்கராயன் வாய்க்காலி்ல் வழக்கமாக தண்ணீர் திறக்கப்படும் ஜூன் 16-ம் தேதிக்கு முன்னர் சீரமைப்பு பணிகளை முடிக்க வேண்டும். வாய்க்காலி்ன் வலது கரையில் காலிங்கராயன்பாளையத்திலிருந்து கோணவாய்க்கால் வரை 15 கிலோமீட்டர் தூரத்திற்கு வலது கரையில் தடுப்புசுவர் அமைக்கவேண்டும்.

வெட்டுக்கூலி மற்றும் லாரி வாடகையினை ஆலை நிர்வாகங்களே ஏற்றுக்கொண்டு, நடப்பு அரவை பருவத்திலேயே கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2500 வழங்கவேண்டும். நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1500 வழங்க வேண்டும். வறட்சியால் விவசாயம் பாதிக்கப்படாமலிருக்க 100 சத மானியம் வழங்கி சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கியு்ள்ள கடன் தொகையினை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

பாசன சபை செயலர் கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் டிஎஸ்.பழனிச்சாமி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**பெருந்துறை சிப்காட்டில் மஞ்சள் ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டும்**

First Published : 27 Mar 2010 02:26:05 AM IST

Last Updated : 27 Mar 2010 08:54:18 AM IST

ஈரோடு, மார்ச் 26: பெருந்துறை சிப்காட்டில் மஞ்சள் ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்ட அனைத்து தொழில்-வணிக சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில்-வணிக சங்கங்களி்ன் கூட்டமைப்புக் கூட்டம் மற்றும் மாநில பட்ஜெட் குறித்த கருத்தரங்கம் வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. கூட்டமைப்புத் தலைவர் என்.சிவநேசன் தலைமை வகித்தார். பொதுச்செயலர் டி.ஜெகதீசன், பொருளாளர் வி.கே.ராஜமாணிக்கம் முன்னிலை வகித்தனர். இந்திய தொழிற்கூட்டமைப்புத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஜி.சுந்தரம் கெப்ரவிக்கப்பட்டார். தொழில்-வணிக சங்கங்களைச் சேர்ந்த கே.குமரவேல், ஏ.பழனிசாமி, பி.எஸ்.வேலு, எம்.நூர்முகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஈரோட்டில் சாயக்கழிவு பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் பொதுசுத்திகரிப்பு நிலையம் அமைக்க தமிழக அரசு நிதி ஒதுக்க வேண்டும்.

பெருந்துறை சிப்காட்டில் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற்று செயல்படும் தொழிற்சாலைகளை, சில சமூக விரோதிகள், தன்னார்வ அமைப்பினர் மிரட்டியும், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தும் வருகின்றனர். தொழிற்சாலைகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியில் தொழில்வரி அபரிமிதமாக உயர்த்தப்பட்டுள்ளதால், தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே ஒவ்வொரு நிறுவனத்தின் நியாயமான வருமான அடிப்படையில் வரி விதிக்க வேண்டும்.

வேளாண் தொழில் சார்ந்த, அறிவு சார்ந்த கண்காட்சிகளுக்கு மத்திய சேவை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும். பெட்ரோல், டீசல் மீதான விலை உயர்வைக் குறைக்க வேண்டும். சிறு தொழில்கள் மீதான கலால் வரி விதிப்பு உச்சவரம்பை ரூ.1.5 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்த வேண்டும்.

வஉசி பூங்காவில் நிரந்தர தொழில், அறிவியல் கண்காட்சி மையம், உள் விளையாட்டு அரங்கு, சிப்காட் மையத்தில் மஞ்சள் ஏற்றுமதி மண்டலம், மெகா குளிர்சாதனக் கிடங்கு, தாளவாடியில் மூலிகைப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வரும் ஏப். 5-ம் தேதி நள்ளிரவு முதல் லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் அறிவித்துள்ளதால், அனைத்து தொழில், வணிகங்கள் பெரிதும் பாதிக்கப்பட உள்ளன. எனவே மத்திய, மாநில அரசுகள் லாரி உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நவீன விவசாயத்திற்கு மண், நீர் ஆய்வு அவசியம்**

First Published : 27 Mar 2010 05:25:15 AM IST

அரவக்குறிச்சி, மார்ச், 26: அரவக்குறிச்சியில் தமிழ்நாடு அரசு வேளாண் துறையின் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் கிரீ6ன்லீப் அக்ரி கிளீனிக் மண் மற்றும் நீர் ஆய்வகம் அண்மையில் தொடங்கப்பட்டது.

விழாவுக்கு கரூர் வேளாண் இணை இயக்குநர் கே. ஜெகதீசன் தலைமை வகித்துப் பேசியது:

பயிரின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களும் மண்ணில் இயற்கையாகவே உள்ளன. பயிர்கள் சீராக வளர்ச்சியடைந்து மகசூல் கொடுக்க, 16 வகையான ஊட்டச் சத்துக்கள் அவசியம். இந்த ஆய்வகத்தின் மூலமாக இப்பகுதி விவசாயிகளுக்கு மண் மற்றும் நீர்வள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

அதை வைத்து இப்பகுதி விவசாயிகள் தங்களுடைய மண் வளம், ஊட்டச்சத்து விவரங்களை அறிந்து அதற்கேற்ப பயிர், உரங்களைத் தேர்வு செய்து பயன்படுத்தலாம். தற்போது, விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி தரத்திற்கு பொருள்களை உற்பத்தி செய்ய, மண் மற்றும் நீர் ஆய்வகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றார் அவர்.

அரவக்குறிச்சி வேளாண் உதவி இயக்குநர் ஆர். வேல்முருகன், பல்லவன் கிராம வங்கி மேலாளர் அலெக்ஸ6ண்டர், வேளாண் துணை அலுவலர் எஸ். ராஜேந்திரன், உதவி வேளாண் அலுவலர் என். சதீஸ்குமார், உதவி விதை அலுவலர் எஸ். சங்கர், கருப்பையா, பள்ளபட்டி உழவர் சந்தை வேளாண் விற்பனை அலுவலர் ஆர். ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காந்தமலர் விவசாய சங்க நிர்வாகிகள் சி. ஈஸ்வரன், கருப்புசாமி, வெங்கடேஷ், பி.என். நல்லசாமி, ரத்தினம், பி. சிதம்பரம், கே. தண்டபாணி, தொழில்நுட்ப உதவியாளர் ஆர். சிவக்குமார், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை கிரீன் லீப் அக்ரி கிளினிக் இயக்குநர் கண்ணையன் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 72.28 அடி**

First Published : 27 Mar 2010 05:24:12 AM IST

தஞ்சாவூர், மார்ச் 26: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 72.28 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 1,470 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**அதிக கொள்முதல் விலை வழங்க பால் உற்பத்தியாளர்கள் வலியுறுத்தல்**

First Published : 27 Mar 2010 02:08:45 AM IST

திருவண்ணாமலை, மார்ச் 26: பாலுக்கு அதிக கொள்முதல் விலை வழங்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரியுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் கோரிக்கைகள் குறித்து பால் உற்பத்தியாளர்கள் பேசியது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது பால் உற்பத்தி குறைந்து வருகிறது. தனியார் நிறுவனங்கள் ஏராளமான சலுகைகள் வழங்குகின்றன. கால்நடைகளுக்கு கோடைக்காலத்தில் வரும் வியாதிகள் வராமல் முன்கூட்டியே தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல்வேறு பால் கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட்டுள்ளன. ஆவின் நிறுவனம் சார்பில் அவற்றை திறக்க உதவி புரிய வேண்டும். நாராயணகுப்பம் கிராமத்தில் மூடப்பட்டுள்ள பால் கூட்டுறவு சங்கத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆவின் பால் அனைத்து இடத்திலும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள தார்ப்பாக், குஜராஜ் மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் வகை பசு மாடுகளை திருவண்ணாமலை மாவட்டத்துக்கு தருவிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு பால் அனுப்பும்போது அளவை குறைத்து காண்பிக்கின்றனர். கூட்டுறவு சங்கத்தில் இருந்து கொள்முதல் செய்யும் போதே அளவையும், அடர்த்தியையும் குறித்து தர வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும். உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கும் போனஸ் தர வேண்டும் என்றனர்.

துணைப்பதிவாளர் டி.பாலசுந்தரம் : மூடப்பட்டுள்ள பால் கூட்டுறவு சங்கங்களைத் திறக்க அனைவரும் உதவ வேண்டும். இந்த ஆண்டு 15 பால் கூட்டுறவு சங்கங்களை மீண்டும் திறக்க உத்தேசித்துள்ளோம்.

ஆட்சியர் மு.ராஜேந்திரன்: திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது 676 பால் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. மூடப்பட்டுள்ள சங்கங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டத்தில் தற்போது 1.8 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. உள்ளூர் தேவைக்கு 34 ஆயிரம் லிட்டரும், ஒன்றிய தேவைக்கு 1.4 லட்சம் லிட்டரும் கொள்முதல் செய்யப்படுகிறது.

பால் உற்பத்தியை பெருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடை தீவனங்கள் தடையின்றி கிடைக்க வகை செய்யப்படும். மேலும் ஆங்காங்கே கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்றார் ராஜேந்திரன்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கூச்சல், குழப்பம்**

First Published : 27 Mar 2010 12:56:58 AM IST

ராமநாதபுரம், மார்ச் 26: மிளகாய்க்கு பயிர்க்காப்பீடு வழங்காதது பற்றி விவசாயிகள் அனைவரும் ஒரே நேரத்தில் கேட்டதால் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் இணை இயக்குநர் சத்தியமூர்த்தி தலைமையில் வியாழக்கிழமை கூட்டம் நடைபெற்றது. துணை இயக்குநர் ராஜேந்திரன், கூட்டுறவுத்துறை இணைப் பதிவாளர் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டம் துவங்கியதுமே விவசாயிகள் பலரும் மிளகாய்க்கு பயிர்க்காப்பீடு செய்வதில அரசு கால தாமதம் செய்வதாகவும் அதற்கான காரணங்களைத் தெரிவிக்குமாறும் கேட்டனர்.

முதுகுளத்தூரைச் சேர்ந்த விவசாயி கணேசன், மிளகாய்க்கு பயிர்க்காப்பீடு வழங்காமல் இருப்பதைக் கண்டித்து இம்மாதம் 31-ம் தேதி விவசாயிகள் சாலை மறியல் செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.ஞானவாசகம் பேசுகையில், கடந்த ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டைத் தான் கேட்கிறோம்.

அதைக் கொடுத்து முடிக்காமல் இருப்பதற்குள் இந்த ஆண்டும் வந்துவிட்டது என்றார். இதே கருத்தை விவசாயிகள் பலரும் தனித் தனியாகவும் கூட்டமாகவும் எழுந்து பேசியதால் கூட்டத்தில கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது.

இந்நிலையில், மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) கே.பாலசுப்பிரமணியம் கூட்டத்திற்கு வந்தார். விவசாயிகள் என்ன காரணத்தால் கூச்சல் போடுகிறீர்கள், அமைதியாக இருங்கள் என்றார்.

அதற்கு ஞானவாசகம், சரியான நேரத்திற்கு விவசாயிகள் வந்து காத்திருக்கும் போது அதிகாரிகளே கூட்டத்துக்கு தாமதமாக வந்தால் பிரச்சினைகளை எப்படி சொல்லுவது.

ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட தேதியில்தான் கூட்டம் நடைபெறுகிறது.

அதிகாரியாகிய நீங்கள் ஏன் தாமதமாக வருகிறீர்கள் என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்து பேசிய ஆட்சியர், எங்களது பணிகள் அதிகாலை 7 மணிக்கே துவங்குகின்றன. வேளாண்மைத்துறை உயர் அதிகாரிகள் சரியான நேரத்திற்கு வந்து கூட்டத்தை நடத்தச் சொல்லி இருக்கிறோம்.

தாமதமாக ஏன் வருகிறீர்கள் என்று நீங்கள் கேட்கக்கூடாது. ஆட்சியருக்கு வேளாண்மைத்துறை மட்டும் இல்லாமல் பல்வேறு துறைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. சட்டம் ஒழுங்குப் பிரச்னைகள் கூட வரலாம்.

கூட்டத்தில் தெருக்களில் பேசுவதுபோல் பேசக்கூடாது. பிரச்னைகள் ஏற்படுவது போல பேசினால் அவர்கள் காவல்துறை முலமாக வெளியேற்றப்படுவார்கள் என்றார்.

நான் குழப்பம் எதுவும் ஏற்படுத்தவில்லை. நீங்கள் தான் குழப்பத்தை ஏற்படுத்துவது போல பேசுகிறீர்கள் என்று ஞானவாசகம் மறுத்துப் பேசினார்.

மேலும், பேசினால் காவல்துறை மூலம் கூட்ட அரங்கை விட்டு வெளியேற்றப்படுவீர்கள் என்று கூறியதுடன் காவல்துறையினரை அழைக்குமாறு உத்தரவிட்டார்.

கூட்டத்திற்கு வந்த விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கீழப்பெருங்கரை
சுப்பிரமணியன், மஞ்சூர் தங்கராஜ், சோழாந்தூர் பாலகிருஷ்ணன், பாலசுந்தரமூர்த்தி ஆகியோர் வரம்பு மீறி பேசுவதை முதலில் நிறுத்துங்கள்.

எதற்கும் ஒரு எல்லையுண்டு என்று ஞானவாசகத்தை அமைதிப்படுத்தினார்கள்.

ஆட்சியரும் இது கடைசியாக இருக்கட்டும் என்று கூறி எச்சரித்து கூட்டத்தை மீண்டும் நடத்தினார்.

கூட்டத்தில் மதுரைவீரன், ஜீவா, காந்தி, முத்துராமு, சுந்தர்ராஜன், மலைச்சந்திரன் ஆகியோரும் வேளாண்மைத்துறை தொடர்பான பல்வேறு பிரச்னைகள் குறித்துப் பேசினர்.

தினமலர்

**உற்பத்தி செலவை குறைத்தால் விவசாயிகளுக்கு லாபம் உண்டு**

அன்னூர்: 'உற்பத்தி செலவை குறைத்தால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்' என, வேளாண் முகாமில் அதிகாரிகள் தெரிவித்தனர். அவினாசிலிங்கம் வேளாண்மை அறிவியல் நிலையம் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய வேளாண் திட்டத்தை செயல்படுத்த கணுவக்கரை கிராமத்தை தேர்ந்தெடுத்துள்ளது. இதற்காக திட்ட வரைவு முகாம் கணுவக்கரையில் நடந்தது. ஊராட்சி தலைவர் சுப்பிரமணியம் பேசியதாவது: இப்பகுதியில் மழை குறைவு, பெய்யும்

சிறிதளவு மழை நீரும் சேமிக்கப்படாமல் வீணாகிறது. நீர்த்தேவையை சரிக்கட்ட புதிய தடுப்பணைகள் கட்ட வேண்டும். இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

விவசாய பரப்பு அதிகரிக்கும். ஆள் பற்றாக்குறையை சமாளிக்க வேளாண் கருவிகளை அதிகமாக அறிமுகப்படுத்த வேண்டும். இயற்கை வளத்தை மேம்படுத்த விரைவில் வளரக்கூடிய புங்கன், வேம்பு, புளி ஆகிய மரங்களின் கன்றுகள் ஊராட்சி சார்பில் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு சுப்பிரமணியம் பேசினார். வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுனர் நாகராஜ் பேசியதாவது: இப்பகுதியில் 3,250 ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது. இதில் மானாவாரியாக 2,500 ஏக்கரிலும், கிணற்று நீர் மூலம் 750 ஏக்கரிலும் பாசனம் செய்யப்படுகிறது. நீர் வசதி உள்ளவர்கள், வாழை மற்றும் காய்கறி பயிரிடுகின்றனர். மானாவாரியாக சோளம் மற்றும் பயறு பயிரிடப்படுகிறது. இந்த கிராமத்தில் உள்ள அனைத்து வேளாண் தகவல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. 2010-11 ம் ஆண்டுக்கான செயல்திட்டம் வரையப்பட்டுள்ளது. கிராமத்தில் தேவை என்ன, அரசின் பங்கு, மக்களின் பங்கு ஆ கியவை பரிசீலிக்கப்படுகிறது.

வேளாண் கருவிகளை அறிமுகப்படுத்த உள்ளோம். இதனால் ஆள் பற்றாக்குறையை சமாளிக்கலாம். நிலக்கடலை, பச்சைப்பயறு, எள் மற்றும் காய்கறி பயிர் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும். இவ்வாறு நாகராஜ் பேசினார். தொழில்நுட்ப வல்லுனர் ரவீந்திரன் பேசுகையில்,"வறட்சியை தாங்கும் ரகங்களை பயன்படுத்த வேண்டும். "தோட்டங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை வலுப் படுத்த வேண்டும். உற்பத்தி செலவை குறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும், இதனால் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் ஒன்றிணைந்து சிறு தடுப்பணைகள் அமைக்க வேண்டும்," என்றார். முகாமில் பல விவசாயிகள் தங்கள் தேவைகளை தெரிவித்தனர். ஊராட்சி துணை தலைவர் ஓதியப்பன், நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் லிங்கசாமி, பசுமை உழவர் மன்ற பொறுப்பாளர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மஞ்சள் அறுவடைக்கு பின் நேர்த்தி முறைகள் : வேளாண் துறை அறிவுரை**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் மஞ்சள் அறுவடை பணி நடந்து வரும் நிலையில் அறுவடைக்கு பின் கையாள வேண்டிய தொழில் நுட்ப முறை குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
வேளாண் துணை இயக்குனர் (வேளாண், வணிகம்) லட்சுமிராஜ் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில்5,159 ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகிறது. குறிப்பாக நீர்வள நிலவள திட்டப்பகுதியான கம்பைநல்லூர் உபவடி நிலப்பகுதியில் மஞ்சள் அறுவடை பகுதியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மஞ்சள் அறுவடைக்கு பின் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால், சந்தை விற்பனையில் கூடுதல் லாபம் கிடைக்கும். மஞ்சள் 9 முதல் 10 மாதங்களில் அறுவடைக்கு வரும். மஞ்சள் பயிரின் தண்டை பத்து நாட்களுக்கு முன் தரையின் மேல்மட்டத்தில் 10 செ.மீ., விட்டு அறுத்துவிட வேண்டும். இதனால், மஞ்சள் ஈரப்பதம் குறைவதுடன் விரைவில் முதிர்ச்சி அடையும். மஞ்சள் கொத்து என்ற கருவியை பயன்படுத்தி மஞ்சளை கொத்தி எடுக்க வேண்டும். மஞ்சளை பதப்படுத்துவது முக்கிய பணியாகும். ஈர மஞ்சளில் இருந்து ஐந்தில் ஒரு பகுதி பதப்படுத்திய மஞ்சளாக கிடைக்கும். பச்சையான மஞ்சளை சுத்தமான நீரில் வேக வைக்க வேண்டும். மஞ்சள் வெந்து விட்டது என்பதை மஞ்சள் வேகும் வாசனை வருவதை கொண்டு அறிந்து கொள்ள முடியும். அப்போது வேக வைப்பதை நிறுத்தி விட்டு விரல் கொண்டு மஞ்சளை அழுத்தி வெந்து விட்டதா? என்பதை கண்டறிய வேண்டும். அதிகமாக வேக வைக்க கூடாது. அவ்வாறு செய்தால், நிறம் மங்கி விடும். மஞ்சளை சரியாக வேக வைக்காவிட்டால் காய வைக்கும் போது மஞ்சள் உடைந்து சிறு, சிறு துண்டாகிவிடும். வேக வைத்த மஞ்சளை 7 செ.மீ., உயரத்துக்கு பரப்பி 15 நாட்கள் வரையில் காய வைக்க வேண்டும். விரலி மஞ்சள் இலகுவாக முறியக்கூடாது. காய வைக்கப்பட்ட மஞ்சள் சிறு, சிறு வேர்களும், செதில்களும் கலந்து இருந்தால் அதை முழுமையாக சுத்தம் செய்திட வேண்டும். மஞ்சளுக்கு மெருகேற்றுவது மிகவும்

அவசியமாகும். மெருகேற்றும் கருவிகள் கொண்டு மெருகேற்ற வேண்டும். மஞ்சளுக்கு நிறமேற்றுவதும் மிகவும் அவசியம். 100 கிலோ மஞ்சளை மெருகேற்ற படிகாரம் 40 கிராம், மஞ்சள் தாள் 2 கிலோ, ஆமணக்கு எண்ணெய் 140 கிராம், சோடியம் பை-சல்பேட் 30 கிராம், ஹைட்ரோ குளோரிக் அமிலம் 30 மில்லி சேர்த்து தயாரிக்கப்பட்ட கரைசலை கொண்டு நிறம் ஏற்றலாம். மஞ்சள் கொடியுடன் ஆல்கஹால் சேர்த்து கரைசல் தயாரித்து மஞ்சளுக்கு நிறம் ஏற்றலாம். மஞ்சளை தரம் பிரித்து விற்பதன் மூலம் நல்ல லாபம் விவசாயிகளுக்கு கிடைக்கும் வாய்ப்புள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வாழை இலை விலை சரிவு**

திண்டுக்கல் : வரத்து குறைந்த போதும், விசேஷங்கள் இல்லாததால் வாழை இலை விலை சரிந்துள் ளது.
நேற்றைய நிலவரப்படி, ஒரு கட்டு இலை 240 ரூபாய்க்கு விற்றது. திண்டுக்கல் காந்தி மார்க் கெட் வியாபாரி ரவிக்குமார் கூறுகையில், "இரண்டு மாதங்களுக்கு முன், முகூர்த்தம், பண்டிகை போன்ற விசேஷங்கள் காரணமாக வாழை இலை விலை அதிகமாக இருந்தது.  ஒரு கட்டுக்கு 250 பெரிய இலைகள், 400 சிறிய இலைகள் இருக்கும். தலா ஒரு கட்டு 500 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது விசேஷங்கள் இல்லாததால், வரத்து குறைந்தபோதும் விலை அதிகரிக்கவில்லை" என்றார்.
திண்டுக்கல்லில் கடந்த வாரம் ஒரு கிலோ நூக்கல் 12 ரூபாய்க்கும், டர்னிப் 17 ரூபாய்க்கும் விற்றது.தற்போது வரத்து குறைந்துள்ளதால், விலை இரண்டு மடங்கு உயர்ந் துள்ளது.நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ நூக் கல், டர்னிப் 35 ரூபாய்க்கு விற்றது. கத்தரி 16, உருளை 12, கோஸ் 5, தக்காளி 9, பச்சைமிளகாய் 30, கேரட் 28, வெங்காயம் 8, பெல்லாரி 13, முள்ளங்கி 8, பீட்ரூட் 13, அவரைக்காய் 32, முருங்கைக்காய் 14,  ஆகிய விலைகளில் விற்கப் பட்டன.
சில மாதங்களாக தொடர்ந்து தக்காளி விலை வீழ்ச்சியடைந்துள்ளது.  நடுப்பட்டி விவசாயி ராமன் கூறுகையில், "15 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி, 18 ரூபாய் வரை குறைந்ததால், விவசாயிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டது. சேகரித் தல், போக்குவரத்து செலவிற்கு கூட கட்டுபடியாகாத நிலை இருந்தது. தற்போது தக்காளி வரத்து குறையத் துவங்கியுள்ளதால், விலை சற்று அதிகரித்துள்ளது" என்றார்.
நேற்றைய நிலவரப்படி ஒரு கூடை தக்காளி, ரகத் திற்கு ஏற்ப அதிகபட்சமாக 90 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. நான்கு நாட்களு க்கு முன் ஒரு கிலோ ஐந்து ரூபாயாக இருந்த தக்காளி, நேற்று ஒன்பது ரூபாயாக அதிகரித்திருந்தது.

**சர்க்கரை விலை உயர்வால் கரும்பு சாகுபடி அதிகரிப்பு**

கோபிசெட்டிபாளையம்:சர்க்கரைக்கு ஏற்பட்டுள்ள விலை உயர்வால் கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் கரும்பு சாகுபடி அதிகளவில் துவங்கியுள்ளது. கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு அதிகளவில் பயரிடப்பட்டு வருகிறது. கூலியாட்கள் பற்றாக்குறை, முற்றிய கரும்பை வெட்ட ஏற்படும் காலதாமதம் போன்ற காரணங்களால், விவசாயிகள் மல்பெரி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களுக்கு முக்கியத்துவம் தரத் துவங்கினர். அத்துடன் மத்திய அரசின் பாராமுகத்தாலும் உரிய கொள்முதல் விலை கிடைக்காமல் கரும்பு விவசாயிகள் வெறுப்படைந்தனர். இதனால், சென்றாண்டு கரும்பு சாகுபடி பரப்பு முற்றிலும் குறைந்தது.

கரும்பு உற்பத்தி குறைவால், கரும்பு ஆலைகள் உற்பத்தியை குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சர்க்கரை உற்பத்தி குறைந்து கடந்த சில மாதங்களாக மார்க்கெட்டில் சர்க்கரை விலை ஜெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. சென்றாண்டு கிலோ 45 ரூபாய் வரை விலை உயர்ந்தது. இது இன்னும் அதிகரிக்கும் என்றே கூறப்படுகிறது.

சர்க்கரைக்கு ஏற்பட்டுள்ள விலை உயர்வை அடுத்து கோபி பகுதிகளில் நடப்பாண்டு முதல் போகத்தில் விவசாயிகள் அதிகளவில் கரும்பு பயிரிடத் துவங்கியுள்ளனர். கரும்பு விளைச்சலுக்கு என நிலத்தில் முதல் கட்டமாக சணப்பையை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இரண்டு மாத கால இடைவெளிக்கு பிறகு கரும்பு பயிரிடப்படும். கோபி பகுதியில் கோ.சி., 95071, கோ 86249, கோ 85019, கோ.ஜி., 5, கோ.வி. 94102 ஆகிய கரும்பு ரகங்கள் அதிகளவில் பயரிடப்படுகிறது. ஒரு ஏக்கரில் கரும்பு பயிரிட இரு பருக்கள் கொண்ட 30 ஆயிரம் கருணைகள் தேவைப்படுகிறது. தற்போது ஆயிரம் கருணைகள் ரகத்தை பொறுத்து 350 முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

கோபி, சிறுவலூர், அத்தாணி, பாரியூர், கொளப்பலூர், வெள்ளாங்கோயில், குருமந்தூர், பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், பொலவகாளிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு பயிரிட அடி உரமாக சணப்பை பயிரிடப்பட்டுள்ளது. கோபி அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளுக்கு முதல் போக சாகுபடிக்காக அடுத்த மாதம் 15ம் தேதி பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பிறகு கோபி பகுதியில் கரும்பு அதிகளவில் பயிரிடத் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**வாழைத்தார் விலை உயர்வு**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் நடந்த வாழை ஏலத்தில் வாழைத்தார் விலை அதிகரித்துள்ளது.சத்தி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த வாரம் நடந்த ஏலத்தில் கதளி கிலோ ஒன்று ஏழு முதல் ஒன்பது ரூபாய் வரை விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில் கதளி 11.10 ரூபாய்க்கு ஏலம் போனது. நேந்திரம் கிலோ 21.10 ரூபாய், தேன் வாழை தார் ஒன்று 250 ரூபாய், மொந்தன் தார் 175 ரூபாய், பூவன் தார் 225 ரூபாய், செவ்வாழை தார் 375 ரூபாய்க்கு ஏலம்போனது. கூடுதல் விலை கிடைத்தது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**தர்பூசணி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

லாலாப்பேட்டை: லாலாப்பேட்டை சுற்றியுள்ள பகுதியில் நிலங்களில் கோடைக்கால வெயில் தணிக்க தர்பூசணி பயிரிடப்படுவது அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகளும் லாபம் அடைகின்றனர். தற்போது கடுமையான வெயில் உள்ளதால் விவசாய பணிக்கு தேவையான தண்ணீர் மற்றும் மின்சாரம் தட்டுப்பாடாக உள்ளது. இதனால், கோடைகால பயிர்களுக்கு பதிலாக, அதிகளவு வருவாய் கிடைக்க கூடிய தர்பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காண்பிக்க துவங்கியுள்ளனர். லாலாப்பேட்டை சுற்றியுள்ள குப்புரெட்டிபட்டி, புனவாசிப்பட்டி, லட்சுமணப்பட்டி, அய்யர்மலை ஆகிய இடங்களில் பரவலாக பயிரிப்பட்டு அதிகளவு விளைச்சல் செய்யப்படுகிறது. வியாபாரிகள் நேரடியாக விவசாய தோட்டங்களுக்கு சென்று தர்பூசணி கிலோவுக்கு ஐந்து ரூபாய் முதல் ஏழு ரூபாய் வரை அளித்து கொள்முதல் செய்து கரூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் வெளியூருக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். இப்பகுதியில் தினசரி ஆயிரம் கிலோ வரை தர்பூசணி கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், தர்பூசணி சாகுபடிக்கு  தண்ணீர் மற்றும் ஆட்கள் தேவை குறைவாக தேவைப்படுவதும் முக்கிய காரணமாக உள்ளது.

**மானியத்தில் நீர்ப்பாசன கருவிகள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

---

பெரம்பலூர்: பெரம்பலூர் வட்டாரத்தில் 50 சதவீத மானியத்தில் நீர்ப்பாசன கருவிகள் பெற விவசாயிகளுக்கு வேளாண்துறை அழைப்பு விடுத்துள்ளது.இது குறித்து வேளாண் உதவி இயக்குநர் செந்தமிழ்செல்வன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:பெரம்பலூர் வட்டார வேளாண் துறை மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்து, பயிறு வகை போன்ற பயிர்களுக்கு தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் ஒரு எக்டருக்கு ரூ. 7ஆயிரத்து 500 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வரும் கோடை பருவத்திலும் பயிரை வறட்சியில் இருந்து காக்க தெளிப்பு நீர்ப்பாசன கருவிகளை பெற்று பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள பெரம்பலூர் மற்றும் அம்மாபாளையம் வேளாண் விரிவாக்க மையங்களை நேரிலோ அல்லது தொலைபேசி எண் 224270 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு இம்மாதத்திற்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் சங்க மாவட்ட குழு கூட்டம்**

புதுக்கோட்டை:புதுகையில் அகிலஇந்திய விவசாய தொழிலாளர் சங்க மாவட்டக்குழு கூட்டம் மாவட்டத்துணை செயலாளர் வீரையா தலைமையில் நடந்தது. மாவட்ட பொருளாளர் உடையப்பன் கொடியேற்றினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் சண்முகம் தொடக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் சங்கர் வேலை அறிக்கை வாசித்தார்.

மா.கம்யூ மாவட்ட செயலாளர் சின்னத்துரை, மாநில துணை செயலாளர் பக்கிரிசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத்தலைவர் செபஸ்தியான், மாவட்ட செயலாளர் பொன்னுசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் 200 நாள் வேலையும், தினக் கூலியாக 150 ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், குடியிருக்கும் அனைவருக்கும்பட்டா வழங்க வேண்டும், மாவட்டத்தில் நிலவும் மின்தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மாவட்ட துணைச்செயலாளர் சுப்பையா வரவேற்றார். சேகர் நன்றி கூறினார்.

**கார் விலை குறையுது... பருப்பு விலை ஏறுது... விவசாயிகளின் சிந்தனையை தூண்டிய தொழில்நுட்பக் கண்காட்சி**

திருவரங்குளம்:நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதினால்தான் கார் விலை குறைந்து வருகிறது. ஆனால் விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தாத தினால் பருப்பு விலை ஏறுகிறது என்று வம்பனில் நடந்த தொழில்நுட்ப வாரத்தொடக்க விழாவில் விஞ்ஞானிகள் கூறினர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் அங்கமான வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் ஐந்து நாள் விவசாய தொழில்நுட்ப தொடக்க விழா தொடங்கியது. விழாவில் கோவை வேளாண்மை பல்கலை கழக விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் கலைச்செல்வன் தலைமை வகித்து பேசியதாவது :

புதிய தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு ஏராளமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் பயிற்சிக்குப்பின் விவசாயிகளிடம் அதை பயன்படுத்துவது குறித்த முயற்சி மற்றும் பயிற்சியின் தாக்கம் எதிர்பார்த்த அளவு இல்லை. விவசாயிகள் தாங்கள் பயிற்சியை விவசாயத்தில் பயன்படுத்துவது குறித்த ஆலோசனைகளை வேளாண் பல்கலை செய்ய தயாராக உள்ளது.

மண்ணின் வளத்தை பாதுகாக்க ஒருங்கிணைந்த பண்ணையம் தான் சிறந்த வழி. தர்மபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் மூலம் கரும்பு, வாஜா, மிளகாய், கத்தரி உட்பட அனைத்து பயிர்களிலும் விவசாயிகள் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளனர். எனவே விவசாயிகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முன் வரவேண்டும்.மதுரை வேளாண் கல்லூரி முதல்வர் முனைவர் வைரவன் பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று சொல்வார்கள். ஆனால் இந்த மாவட்டத்தில்தான் நெல், கரும்பு, மக்காச்சோளம், கடலை, பயறு வகைகள் உள்ளிட்ட அனைத்து காலங்களிலும் விளையும் பயிர்களை காண முடியும். மேலம் மா, பலா, வாழை என்ற முக்கனிகளிலும் அதிகமாக விளையும் மாவட்டமும் புதுக்கோட்டைதான். ஆனால் இங்கு விளையும் காய்கனிகளை பதப்படுத்த குளிரூட்டும் நிலையங்கள் இல்லை என்பதால் இங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது விவசாய தொழில்நுட்பங்கள் பரவலாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு நிறுவனங்களுடன் இப்போது இந்திய புகையிலை நிறுவனம் என்ற தனியார் நிறுவனமும், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டிணம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள 50 ஆயிரம் விவசாயிகளுக்கு அனைத்து வகை பயிர்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களை விளக்கும் சேவையில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு காரணம் இனி தொழில்நுட்பங்களின் மூலம்தான் விவசாய உற்பத்தியை பெருக்க முடியும்.

அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி முதல்வர் கதிரேசன் பேசியதாவது : இன்றைக்கு வேளாண்மையின் முக்கியப்பிரச்னை ஆள் பற்றாக்குறைதான் இயந்திரம் இல்லாமல் இனி விவாயம் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டு வருகிறது. களை எடுக்க உதவும் கருவியின் மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.ஆயிரம் மிச்சம் பண்ண முடியும். வரப்போகும் காலங்களில் இன்னும் ஆள் பற்றாக்குறை ஏற்படும். எனவே இனி விவசாயிகளின் குடும்பம் மட்டுமே நிலத்தில் வேலை செய்யும் நிலைதான் ஏற்படும்.இதனால் இப்போதே விவசாய கருவிகளை பயன்படுத்த தொடங்கினால்தான் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் தாஜுதீன் பேசியதாவது: விவசாயத்தில் வருமானம் குறைவதால்தான் சலிப்பு ஏற்படுகிறது. இதற்கு விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றாமல் இருப்பதுதான் காரணம். தொழில்நுறையில் உடனுக்குடன் நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால்தான் பல லட்ச ரூபாய்க்கு விற்ற கார் இன்றைக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு கிடைக்கிறது.

ஆனால் விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகள் தயங்குவதால்தான் பருப்பு உற்பத்தி குறைந்து விலை ஏறுகிறது. இதை விவசாயிகள் யோசிக்க வேண்டும். புதிய தொழில்நுட்பங்களின் மூலம்தான் இனி விவசாய உற்பத்தி அதிகரிக்கும் என்பதை விவசாயிகள் உணர வேண்டும்.

விழாவில் முன்னோடி விவசாயிகள் முத்துராசு, வீராசாமி ஆகியோர் பேசும்போது : விவசாயத்திற்கு இன்றைக்கு மின்சாரம் அடிப்படை தேவையாகி விட்டது. எனவே தடையில்லா மின்சாரம் கிடைக்கச்செய்வதன் மூலமே உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்றனர்.மகளிர் குழு தலைவி திருவரங்குளம் மீனாள் பேசும்போது : இங்கு மதிப்பூட்டப்பட பொருள்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால் இப்பயிற்சியை பயன்படுத்தி தொழில்கள் செய்யபலர் முன்வரத் தயங்குகின்றனர்.

எனவே பயிற்சிக்குப்பின் தொழில் தொடங்க ஊக்குவிப்பு முகாம்கள் நடத்த வேண்டும் என்றார்.முன்னதாக வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சின்னையன் வரவேற்றார். பயறுவகை ஆராய்ச்சி மைய தலைவர்

ராமசாமி நன்றி கூறினார். விழாவில் பல்வேறு விவசாயத்திற்கு பயன்படும் கருவிகள் உள்ளிட்ட கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இதனை விவசாயிகள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

**விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் அமையுமா கஞ்சம்பட்டி அணை : பார்த்திபனூர் மதகு அணையை நினைத்து கவலை**

மநாதபுரம் : விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் கஞ்சம்பட்டி அணை மற்றும் அதன் கால்வாய்கள் அமைக்கப்படுமா, என, விவசாயிகள் தரப்பு எதிர்பார்த்துள்ளது.

வறண்டு போன ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக இருப்பது நீர். வைகை பாசனம் என்ற பெயர் இருந்தாலும், அதனால் பெரிய அளவில் பிரயோஜனம் இல்லை. 'ஒவ்வொரு ஆண்டும் வைகை நீரால் எவ்வளவு ஏக்கர் பாசனம் பயன்பெற்றது,' என்பதற்கு பதிலாக, 'ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நீர், கடலில் கலந்தது,' என்ற, ரீதியில் தான் பாசன கால்வாய்களின் நிலை உள்ளது. கால்வாய்களில் தான் இந்நிலை என்றால், அதை பெற்றுத்தரும் பார்த்திபனூர் மதகு அணையின் நிலை அதை விட பரிதாபம்.

பார்க்க 'பளீச்' என இருந்தாலும், அதன் மூலம் கிடைக்கும் பயன்பாடு பெரிய அளவில் விவசாயிகளிடம் சேர்வதில்லை. அங்கிருந்து தொடங்கும் இடது, வலது பிரதான கால்வாய்களின் பராமரிப்பின்மையால், பாசன நீர் விளைநிலங்களுக்கு பதில் தரிசுகளில் பாய்ந்து வருகிறது. 'சிமென்ட் கரை அமையுங்கள், பாசன கால்வாய்களை பராமரியுங்கள்,'என, விவசாயிகளிடத்தில் வைக்கப்படும் கோரிக்கைகள் இன்னும் மனுக்களில் தான் இடம் பெற்றுள்ளன.

கால்வாய் உள்ளவர்களுக்கு இந்நிலை என்றால், கால்வாய் பாசனம் இல்லாத கடலாடி பகுதியின் நிலையை சொல்லியா தெரியவேண்டும். இதை கவனத்தில் எடுத்து கொண்டு தான், தமிழக அரசு கஞ்சம் பட்டி அணை கட்ட முடிவு செய்துள்ளது. விளாத்திகுளம், திருச்சுழி தாலுகாவில் பெய்யும் மழைநீர் காட்டாறாக வந்து வேம்பாற்றின் வழியாக கடலில் கலக்கிறது.

இவ்வாறு வரும் நீர் வழியில் விவசாய பயிர்களையும் அழிக்கிறது. இந்த நீரை பிரயோஜனமாக பயன்படுத்தும் நோக்கில், கஞ்சம்பட்டி ஓடை குறுக்கே அணை அமைத்து, 20 கி.மீ., நீளத்தில் புதிய கால்வாய் அமைக்கவும் இத்திட்டத்துக்கு என 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சாயல்குடி உட்பட 43 கண்மாய்களை சேர்ந்த 4200 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

இதற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளநிலையில், பார்த்திபனூர் மதகு அணை போல இல்லாமல், அனைத்து வசதிகளையும் கொண்ட அணையாக கட்ட வேண்டும். இதன் கீழ் வரும் பாசன கால்வாய்களையும் கண்மாய்களுக்கு செல்லும் வகையில் நேர்த்தியாக அமைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் வலது, இடது பிரதான கால்வாய் போல, கஞ்சம்பட்டி பாசனமும் பொய்த்து போகும் அபாயம் ஏற்படும்.

**மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி**

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் அருகே உள்ள செங்குடி ஊராட்சியில் மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி நடந்தது.

ஊராட்சி தலைவர் சூசை தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் முகமது அப்துல் நசீர் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் நாராயணமூர்த்தி, மண்புழு வகை பற்றி பேசினார். உதவி வேளாண் அலுவலர் நாகேஸ்வரி பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**நுண்ணீர் பாசன கருத்தரங்கம்**

ராமநாதபுரம் : மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் நுண்ணீர் பாசன கருத்தரங்கம் ராமநாதபுரத்தில் நடந்தது. மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி முன்னிலை வகித்தார்.பரமக்குடி வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் செந்திவேல் , சிவகங்கை சக்தி சர்க்கரை துணை பொதுமேலாளர் பால்டேவிட், ராமநாதபுரம் வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் நாகராஜன் பேசினர். தோட்டக்கலை உதவி இயக்குனர் சமுத்திரபாண்டியன் வரவேற்றார். தோட்டக்கலை அலுவலர் பானுபிரகாஷ் நன்றி கூறினார்.

**மரங்களில் இருந்து பழுத்து உதிரும் பிஞ்சுகள் : விளைச்சல் குறைவால் மாம்பழம் விலை உயரும்**

மேட்டூர்: வறட்சி காரணமாக சேலம் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மாமரங்களில் பூக்கள் பிடிப்பது குறைந்தது மட்டுமின்றி, பிஞ்சுகளும் பழுத்து உதிர்வதால் நடப்பாண்டில் மாம்பழ உற்பத்தி குறைந்து விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் முழுவதும் 3,000 ஹெக்டேருக்கும் மேற்பட்ட பரப்பில் விவசாயிகள் மா சாகுபடி செய்துள்ளனர். அதில், மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில் 90 ஹெக்டேர், நங்கவள்ளி ஒன்றியத்தில் 250 ஹெக்டேர், மேச்சேரி ஒன்றியத்தில் 234 ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேட்டூர் தாலுகா வறண்ட பகுதி என்பதால் மானாவாரி நிலங்களில் மட்டுமே 70 சதவீத மாமரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் நங்கவள்ளி, மேச்சேரி பகுதியில் இருந்து அல்போன்ஸா, இமாம்பசந்த், மல்கோவா ரக மாம்பழங்கள் வெளிநாடுகளுக்கும், செந்தூரா, நீலம், பெங்களூரா ரகம் ஜூஸ் கம்பெனிகளுக்கும் அனுப்புவதற்காக வியாபாரிகள் வாங்கி செல்வார்கள்.

சில ஆண்டுகளாக மேட்டூர் பகுதியில் மா விளைச்சல் அமோகமாக இருந்தது. நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக மாமரத்தில் பூக்கள் குறைந்த அளவே பூத்தது. அவற்றிலும் 50 சதவீத பூக்கள் வறட்சியால் உதிர்ந்து விட்டது. மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்த மாமரங்கள் கருகி வருகிறது. நீர்ச்சத்து இல்லாததால் பிஞ்சுகள் மரத்திலேயே பழுத்து உதிர்கிறது. அதனால், கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் மா உற்பத்தி கணிசமாக குறையும். பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாம்பழங்கள் விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தோட்டக்கலை துறை அலுவலர்கள் கூறுகையில், "ஒரு ஹெக்டேரில் 100 மரங்கள் வீதம் மேட்டூர் தாலுகா முழுவதும் 5,500 முதல் ஆறாயிரம் மரம் உள்ளது. பெங்களூரா மரங்கள் கோடையை தாங்கி வளரும் தன்மை உடையவை. எனவே, மேட்டூர் தாலுகாவில் பெங்களூரா ரக மாமரங்களே அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக பெங்களூரா ரக மாமரங்களிலும் பிஞ்சுகள் பழுத்து உதிர்வதால் கடந்த ஆண்டை நடப்பாண்டில் பழங்கள் உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கும்." என்றனர்.

நடப்பாண்டில் மாமரங்களில் காய்கள் உற்பத்தி குறைந்தாலும் பரவாயில்லை. மாமரங்கள் கருகி விடக்கூடாது என விவசாயிகள் கருதுகின்றனர். ஆனால், நீர்தட்டுப்பாடு காரணமாக நங்கவள்ளி பகுதியில் மாமரங்களும் படிப்படியாக கருகி வருவது விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

**பொட்டல் காடாக மாறி வரும் விளைநிலங்கள் : கால்நடைகளை காப்பாற்ற விவசாயிகள் முயற்சி**

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் நிலவி வரும் கடும் வறட்சியால், விளைநிலங்கள் பொட்டல் காடாக மாறி வருகின்றன. ஒரு லாரி வைக்கோல் 9,000 ரூபாய் விலை கொடுத்து வாங்கி வந்து, தீவனத்திற்கு வழியின்றி பரிதவித்து வரும் கால்நடைகளை காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சேலம் மாவட்டத்தில் அயோத்தியாப்பட்டணம், வாழப்பாடி, பெத்தாநயக்கன்பாளையம், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, தம்மம்பட்டி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பெரும்பாலான மக்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கூலித்தொழில் செய்து பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

விவசாயிகளும், விவசாய கூலித்தொழிலாளர்களும் ஆடு மற்றும் கறவை மாடு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பையே

நிரந்தர வருவாய்க்கு பிரதானமாக கொண்டுள்ளனர். தினந்தோறும் பால் உற்பத்தி மூலம் கணிசமான வருவாய் ஈட்டிக் கொடுக்கும் கறவை மாடுகளையும், இறைச்சிக்காக ஆடுகளையும், ஏர் உழுதல், வண்டியிழுத்தல் போன்ற பணிகளுக்காக எருதுகளையும் விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.
இப்பகுதியில் ஆறு மாதத்திற்கு மேலாகவே மழை பொழிவு இல்லாததால், நிலத்தடி நீர்மட்டம் அடியோடு குறைந்து, விளைநிலங்கள் பயிர் செய்ய வழியின்றி பொட்டல்காடாக மாறிவருகின்றன. மேய்ச்சலுக்கு வழியில்லாததால் தீவனத்திற்கு வழியின்றி கால்நடைகள் பரிதவித்து வருகின்றன.
கால்நடைகளுக்கு புண்ணாக்கு, தவிடு, பருத்திகொட்டை மற்றும் மக்காச்சோளம், மரவள்ளி கழிவுகளை விவசாயிகள் வாங்கி போட்டும் போதிய போஷாக்கு கிடைக்காமல் கால்நடைகள் நலிந்து வருகின்றன.
எனவே, திருவண்ணாமலை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் நெல் அறுவடை செய்யும் விவசாயிகளிடம் இருந்து நெற்பயிர் வைக்கோலை அதிக விலை கொடுத்து வாங்கி வந்து, பதப்படுத்தி வைத்து, சிறுக சிறுக கொடுத்து கால்நடைகளை காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
அதனால், நெற்பயிர் வைக்கோலுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன் வரை அதிகபட்சமாக 6,000 ரூபாய் வரை மட்டுமே விற்கப்பட்ட ஒரு லாரி வைக்கோல் தற்போது 9,000 ரூபாயை தாண்டியுள்ளது. இருப்பினும், வைக்கோலை விலை பேசி வாங்கி வருவதற்கு விவசாயிகள் வெளிமாவட்டங்களில் முகாமிட்டுள்ளனர்.

**உளுந்து, மக்காச்சோளம் பயிரிட அரசு மானியம்**

சிவகங்கை : "உளுந்து, மக்காச்சோளம் பயிரிட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது, " என விவசாய இணை இயக்குனர் ரவிகுலசேகர பாண்டியன் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: மாவட்டத்தில் திருப்புவனம், எஸ்.புதூர் ஒன்றியத்தை தவிர பிற ஒன்றிய விவசாயிகள், தங்களது நிலத்தில் தற்போது உளுந்து, மக்காச்சோளம், நிலக்கடலை பயிரிடலாம். இப்பயிர்களை நடவு செய்ய மானியத்தில் விதை, மருந்துகளை அரசு வழங்குகிறது. இதற்காக, வட்டார விவசாய உதவி இயக்குனர் அலுவலகங்களில் விதை உளுந்து 12.5 டன், விதை மக்காச்சோளம் 1.25 இருப்பு உள்ளது. விவசாயிகள் மண்புழு உரம் தயாரிக்கவும் மானியம் தரப்படுகிறது. பயிர்களை நடவு செய்ய முன்வரும் விவசாயிகளுக்கு விதை, விதை நேர்த்தி மருந்து, உயர் உரம், ரசாயன உரம், தாவரவியல் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கப்படும்.
மானியம்: உளுந்துபயிரிடும் விவசாயிக்கு எக்டருக்கு 1,500 ரூபாய், மக்காச்சோளம், நிலக்கடலைக்கு எக்டருக்கு 4,000; மண்புழு உரக்கலவை அமைக்க 5, 000 ரூபாய் மானிய விலையில் இடு பொருட்கள் வழங்கப்படும். இந்த மானியத்தை பெற விவசாயிகள் மார்ச் இறுதிக்குள் வட்டார விவசாய இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம், என்றார்.

**உற்பத்தியை அதிகரித்து லாபமடைய நவீன முறையை பின்பற்றுங்க: விவசாயிகளுக்கு கலெக்டர் அட்வைஸ்**

திருச்சி:திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம் முத்தாழ்வார்பட்டி ஊராட்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் பொதுமக்களுக்கு வீட்டு வாசலில் வங்கிச்சேவை அளிக்கும் திட்டத்தில் அடையாள அட்டைகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் வீடுகள் கட்ட வங்கி கடனுதவி தொகைகள் மற்றும் தொழில் தொடங்க வங்கி கடனுதவி தொகைகள் வழங்கும் விழா நடந்தது.

விழாவிற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பொது மேலாளர் எஸ்.என்.மிஸ்ரா தலைமை வகித்தார். விழாவில், கலெக்டர் சவுண்டையா கலந்து கொண்டு வங்கி அடையாள அட்டைகளையும், கடன் உதவிகளையும் வழங்கி பேசுகையில், முத்தாழ்வார்பட்டி ஊராட்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஸ்மார்ட் கார்டு மூலம் அக்கிராமத்திலிருந்தே ஒரு நபர் நாள் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் வரை அவரது கணக்கில் பணம் செலுத்தவும், பணம்

பெறவும் முடியும். வங்கியின் பணபரிமாற்ற பணியாளர் ஒருவர் ஸ்மார்ட் கார்டு பணி பரிமாற்றம் செய்திடும் இயந்திரத்துடன் தினசரி இக்கிராமத்திற்கு வந்து வங்கிப்பணிகளை மேற்கொள்வார்.

நாளுக்கு நாள் விவசாய நிலப்பரப்பு குறைந்து வருகிறது. விவசாய உற்பத்தியை அதிகரித்தால் தான் நாட்டின் தேவையை சமாளிக்க முடியும். விவசாயிகள் பழமையான விவசாய முறைகளை பின்பற்றாமல், நவீன முறைகளை பின்பற்றி செம்மை நெல் சாகுபடி முறை, நுண்ணீர் பாசனம் போன்ற முறைகளில் விவசாயம் செய்யும்போது உற்பத்தி அதிகரித்து லாபமடைய முடியும் என்றார்.

விழாவில், 71 பேருக்கு வங்கியின் அடையாள அட்டைகளையும் (ஸ்மார்ட் கார்டு), இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கடனுதவியாக 30 பேருக்கு தலா ரூ.20 ஆயிரம் வீதம் ரூ.6 லட்சத்திற்கான காசோலைகளையும், 4 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.4.20 லட்சம் மதிப்பில் சுழல்நிதி மானியம் மற்றும் வங்கி கடனுதவி தொகைகளுக்கான காசோலைகளையும், சேத்துப்பட்டி கருப்பண்ணன் என்பவருக்கு தோட்டக்கலைத்துறை மூலம் காய்கறி மற்றும் பழத்தோட்டம் அமைக்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவியாக ரூ.6.40 லட்சம் மதிப்பிலான காசோலையையும், ரங்கசாமி என்ற மாணவருக்கு கல்விக்கடன் உதவியாக ரூ.60 ஆயிரத்திற்கான காசோலையையும் கலெக்டர் சவுண்டையா வழங்கினார்.

விழாவில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் லட்சுமி நாராயணன், வேளாண்மை வளர்ச்சி முதன்மை அலுவலர் ஜனார்த்தனன், முன்னோடி வங்கி மேலாளர் ராமதாஸ், மருங்காபுரி கிளை மேலாளர் கோபாலகிருஷ்ணன், முத்தாழ்வார்பட்டி ஊராட்சித் தலைவர் பழனிசாமி, மான்போர்ட் சமூகசேவை இயக்குனர் குரூஸ் மெசியாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோவத்தக்குடியில் விவசாய கடன் அட்டை வழங்கல்**

மண்ணச்சநல்லூர்:மண்ணச்சநல்லூர் ஐ.ஓ.பி. கிளை சார்பில் கோவத்தக்குடியில் விவசாயிகளுக்கு விவசாய கடன் அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.நிகழ்ச்சிக்கு வங்கி பொதுமேலாளர் மிஸ்ரா தலைமை வகித்து விவசாய கடன் அட்டை வழங்கினார்.

தொடர்ந்து முதன்மை மண்டல மேலாளர் லட்சுமி நாராயணன் பேசுகையில், திருச்சி மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் விவசாய கடன் அட்டை வழங்கப்படும். முதல்கட்டமாக கோவத்தக்குடியில் தகுதியான விவசாயிகளுக்கு விவசாய கடன் அட்டை வழங்கப்படுகிறது. தொழிலாளர்கள் பற்றாக்குறை இருப்பதால் நவீன இயந்திரங்கள் வாங்கவும் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படும்.

மேலும் விவசாயிகளுக்காக திருச்சி கன்டோன்மென்டில் இலவச பயிற்சி நிலையமும் செயல்படுகிறது என்றார்.ஒன்றிய சேர்மன் சீதா, வி.ஏ.ஓ. திவேல், தோட்டக்கலை உதவி இயக்குனர் சம்பத், கோவத்தக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சூடாமணி உள்ளிட்ட பலர் பேசினர். நிகழ்ச்சியில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கிளை மேலாளர் வேலுமணி வரவேற்றார். ஊராட்சித் தலைவர் நடராஜன் நன்றி கூறினார்.

**விவசாய தொழில்நுட்பங்கள் குறித்துகலைநிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு**

ஆரணி:விவசாயத்தில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை கலைநிகழ்ச்சிகள் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.ஆரணி அடுத்த அக்ராபாளையம் கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில் வேளாண்மை திட்டங்கள் குறித்த

விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நாடகம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு, ஆரணி ஒன்றியக்குழு தலைவர் தாட்சாயிணி தலைமை வகித்தார். பஞ்., தலைவர் கணபதி முன்னிலை வகித்தார். ஆரணி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் வரவேற்று பேசினார்.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வுகளை விவசாயிகளிடம் நேரடியாக எடுத்துரைக்கும் வகையில், தி.மலை மாவட்டத்தில் ஆரணி, செய்யாறு, வந்தவாசி, சேத்துப்பட்டு, பெரணமல்லூர் உட்பட பல பகுதிகளில் சேலம் பிரியம் கலைக்குழுவினர் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.இதில், பயறு வகை பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க தேவையான தொழில்நுட்பங்களையும், செம்மை நெல் சாகுபடியால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், சொட்டுநீர் பாசனத்தின் அவசியம் குறித்தும் விவசாயிகளிடம் கலைநிகழ்ச்சிகள் மூலம் நாடகம் வாயிலாக எடுத்துக் கூறினர். இதில் அக்ராபாளையம், சேவூர், அடையபுலம், ராட்டிணமங்கலம் உட்பட பல கிராமங்களில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப வார விழா துவக்கம்**

திண்டிவனம்: திண்டிவனத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் ஐந்து நாட் கள் நடைபெறும் தொழில் நுட்ப வார விழா துவங்கியது.

திண்டிவனத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப வார விழா துவங்கியது. நவீன வேளாண் தொழில்நுட்ப விழிப்புணர்வை ஏற்படுத்தி, வேளாண் உற்பத்தியை பெருக்கும் நோக்குடன் நடத்தப்படும் தொழில் நுட்ப வார விழா துவங்கியது. விழாவில் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் ராமமூர்த்தி வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் முருகேசபூபதி தலைமையேற்று ஒருங்கிணைந்த பண்ணையம் நிழல்வலை கூடாரத்தை திறந்து வைத்து, விழாவை துவக்கி வைத்து பேசினார். தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர் கலைச் செல் வன், ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் ஜெயராஜ், வல்லம் வட்டம் வேளாண்மை துணை இயக்குனர் துரைசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் மற்றும் பெண்கள் சுயஉதவிக்குழுக் குழுவினர், எண் ணெய் வித்து ஆராய்ச்சி நிலையம், வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் பூர் ணிமா நன்றி கூறினார். இந்த விழா நாளையுடன் முடிவடைகிறது.

**பாசன நீர் மேலாண்மைக்கு 'முடிவு காண உதவும் அமைப்பு' : புதிய சாப்ட்வேர் அறிமுகம்**

விருதுநகர் : தமிழக பொதுப்பணித்துறையினர் வறட்சி காலங்களில் நீர் மேலாண்மை செய்ய 'முடிவு காண உதவும் அமைப்பு', எனும் புதிய சாப்ட்வேர் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.
வறட்சி நேரங்களில் தவிப்பு: மழை காலங்களில் கடுமையான வெப்பமும், வெப்ப நேரங்களில் மழையும் பெய்து வருவதால் விவசாயிகளுக்கு அணை தண்ணீரை பங்கிட்டு கொடுப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. இதுபோன்ற நேரங்களில் பொதுப்பணித்துறையினர் முடிவு எடுக்க, புது சாப்ட்வேர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
புதிய சாப்ட்வேர்: புதிய தொழில் நுட்பத்தின்படி, மழை பெய்த அளவை கம்ப்யூட்டரில் பதிவு செய்துவிட்டால், புவியின் மேற்பரப்பில் ஓடும் நீரின் அளவையும், பூமிக்கு அடியில் ஓடும் நீரின் அளவையும் புதிய சாப்ட்வேர் தெரிவிக்கும். இது, வறட்சி காலங்களில் நீரியல் மேலாண்மை செய்வதற்கு பொதுப்பணித்துறைக்கு உதவிகரமாக இருக்கும்.
மழைக்காலங்களில் கிடைக்கும் நீரை, யாருக்கு எப்போது, எவ்வளவு கொடுக்கலாம் என்ற விபரத்தையும் இந்த

சாப்ட்வேர் வடிவமைத்து கொடுக்கும். இந்த திட்டம் தமிழகத்தில் தான் முதன் முறையாக செயல்படுத்தப்படுகிறது. புதிய திட்டத்தின் மூலம் தமிழ்நாடு விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவர்.

**தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகள்...கண்ணீர்!: சின்ன வெங்காய பயிர்கள் கருகும் அவலம்**

சுல்தான்பேட்டை: வலசுப்பாளையத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் சின்ன வெங்காய பயிர்கள் கருகி, அழியும் அபாய நிலையில் உள்ளன. சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் வழங்கி, பயிரை காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடு பட்டுள்ளனர். அப்பகுதியில் பழுதடைந்துள்ள பி.ஏ.பி., வாய்க்காலை சீரமைத்து, முறையாக தண்ணீர் கிடைக்க, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். சுல்தான்பேட்டை வட்டாரத் தில் ஒவ்வொரு பருவமும் 3,000 ஏக்கர் பரப்பளவுக்கு சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப் பட்டு, அறுவடை செய்யப் படுகிறது. 45 நாட்கள் நாற்றங் காலிட்டு, பின், அதை  பிடுங்கி பாத்திகளில் நடவு செய்து, 110 நாளில் அறுவடைக்கு வரும் சின்ன வெங்காயம் சாகுபடியும், விதை வெங்காயம் ஊன்றி 80 நாளில் அறுவடைக்கு வரும் சின்ன வெங்காயம் சாகுபடியும் நடக்கிறது.

பி.ஏ.பி., தண்ணீர் பாசன வசதி கொண்ட விவசாயிகள், 110 நாளில் அறுவடைக்கு வரும் சாகுபடியை விரும்பி செய்கின்றனர். அவ்வசதி இல்லாத விவசாயிகள், விதை வெங்காயம் ஊன்றி செய்யப்படும் சாகுபடியில் ஆர்வம் காட்டு கின்றனர். இரு சாகுபடிக்கும் உள்ள வித்தியாசம் விளைச்சல் தான். ஒரு ஏக்கர் சாகுபடி முதல் அறுவடை வரை, விவசாயிக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. நல்ல முறையில் விளைச்சல் இருந்தால், ஏக்கருக்கு எட்டு முதல் 10 டன் வரை வெங்காயம் கிடைக்கும். தற்போது சுல்தான்பேட்டை வட்டாரத்தில் மீண்டும் வெங்காய சாகுபடியில் விவசாயிகள் ஈடு பட்டு வருகின்றனர். முன்பு குறிப் பிட்ட பட்டத்துக்கு மட்டுமே வெங்காயம் சாகுபடி செய்யப் படும் நிலை இருந்தது. தற்போது, தண்ணீர் வசதி இருந்தால், எந்த பருவத்திலும் சாகுபடி செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு மாதத்துக்கு முன், விவசாயிகளிடம் 12 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட சின்ன வெங்காயம், தற்போது கிலோ ஆறு ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், அவ்விவசாயிகள் ஏக்கருக்கு 5,000 ரூபாய் வரை நஷ்டத்தை சந்தித் துள்ளனர்.  வெளிமாநிலங்களில் இருந்து சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பு, விலையை வீழ்ச்சி அடையச் செய்துள்ளது. இருப் பினும் அடுத்தமுறை லாபம் பார்த்து விடலாம் என்ற எண்ணத் தில் நூற்றுக்கணக்கான விவசாயி கள், மறுபடியும் சின்ன வெங்காயம் சாகுபடியில் ஈடு பட்டு வருகின்றனர். இந்நிலையில், ஜே.கிருஷ்ணா புரம் ஊராட்சியில் உள்ள வலசுப்பாளையம் கிராமத்தில் 80 ஏக்கர் பரப்பளவுக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ள சின்ன வெங்காயம் பல இடங்களில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கருகி அழியும் நிலையில் உள்ளது.  சில விவசாயிகள் சாகுபடி செய்த வெங்காயம், அறுவடைக்கு வர இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் வெயிலில் கருகுகின்றன.  பயிர் அழிந்தால் கடும் நஷ்டத்தை சந்திக்க நேரிடும் என்ற அச்சத்தில், சொட்டு நீர் பாசனம் மூலம் வெங்காயத்தை காப் பாற்றும் முயற்சியில் ஈடுபட் டுள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: வலசுப்பாளையத்துக்கு பி.ஏ.பி., தண்ணீர் போதிய அளவு கிடைக்காததால், வெங்காய பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. வலசுபாளையம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பழுதடைந்துள்ள பி.ஏ.பி., வாய்க்காலை சீரமைக்க வேண்டும்; மெயின் வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்காலில் சட்ட விரோதமாக தண்ணீர் திருடினால் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.  வலசுப்பாளையம் பகுதிக்கு பி.ஏ.பி., தண்ணீர் சீராக வர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

**வேளாண் அதிகாரிகளின் மெத்தனம் : வீணாகும் விதை கிராம திட்டம் : தானியப்பயிர் சாகுபடியில் பாதிப்பு**

உடுமலை: 'தானியப்பயிர்கள் சாகுபடியை அதிகரிக்க வேளாண்துறை அதிகாரிகள் முறையாக திட்டமிடாமல் மேற்கொண்ட பணிகளால் விதை கிராம திட்டம் வீணாகியுள்ளது,' என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். விவசாய சாகுபடியில் தானியப் பயிர்கள் சாகுபடியை மீண்டும் அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் சார்பில் நிதி ஒதுக்கி விதை கிராம திட்டம் செயல்படுகிறது. விதை உற்பத்தி, விதை பண்ணை மற்றும் நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறித்த பயிற்சி அளிக்கப் படுகிறது. உடுமலை பகுதியில் பெதப்பம்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்குட்பட்ட புதுப்பாளையம், இலுப்பநகரம், பூளவாடி, குடிமங்கலம் ஆமந்தகடவு கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. கொண்டைக்கடலை தானிய சாகுபடி அதிகரிக்க விதைகள் மானியத்தில் வழங்கப்பட்டது. இதற்கு வேளாண்துறை அதிகாரிகள் பணம் கேட்டதாக விவசாயிகள் புகார் தெரிவித்ததால் முதற்கட்டமாக பிரச்னை ஏற்பட்டது. கொண்டைக்கடலை சாகுபடியை துவக்கி விவசாயிகள் களை எடுத்தல் பணிகளை முடித்த பின் விதைப்பு பணிகள் குறித்து தொழில் நுட்பங்களை வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அதனால், அதிருப்தியடைந்த விவசாயிகள் பயிற்சி கூட்டத்தை புறக்கணிக்க துவங்கினர். இதனால், பாசன சங்க நிர்வாகிகள் மூலம் பயிற்சி கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு 50 ரூபாய் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. பயிற்சி நாளில் விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்க ஒதுக்கப்பட்ட நிதியை, உணவு வழங்காமல் அவர்களுக்கு ஊக்கதொகையாக வேளாண்துறையினர் வழங்கினர். ஆனால், பயிற்சி கூட்டத்தில் பங்கேற்க விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால், பெயரளவிற்கு கூட்டம் நடத்தப்பட்டது. கொண்டைக்கடலை அறுவடை பணிகள் துவங்கிய போது இறுதி கட்டமாக விதை பயிற்சி முகாம் நடந்தது. இவ்வாறு, தானியப்பயிர்கள் சாகுபடியை அதிகரிக்க முறையாக திட்டமிடாமல் வேளாண்துறை அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். பயிற்சி முகாமை பயன்படுத்தி இதுவரை எந்த விவசாயியும் விதைப்பண்ணை அமைக்கவில்லை. தானியபயிர்கள் சாகுபடியும் உயரவில்லை. இதனால், மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கிய நிதி அனைத்தும் வீணாகியுள்ளது.